**OS No.118/2018**

PW 1 – கண்ணன்

நாள் 09.04.2026

**வா.சா.1 அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு அவரை பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

வா.சா.ஆ 9 முதல் வா.சா.ஆ 15 வரை தாக்கல் செய்துள்ள ஆவணங்களுக்கு எதற்காக தாக்கல் செய்துள்ளீர்கள் என்று கூடுதல் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

வா.சா.ஆ 9 இறப்புச்சான்றை நகராட்சியில் மனு கொடுத்து மேற்படி ஆவணத்தை வாங்கினேன். வா.சா.ஆ 9 ஆவணத்தில் இறப்பு பதிவு செய்த தேதி 27.08.2015 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

மேற்படி ஆவணத்தில் இறப்பு தேதி 20.07.1948 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. 1948 ல் இறந்த விசயத்தை 67 வருடங்கள் கழித்து 2015 ல் இறப்பு பதிவு செய்ததற்கு என்ன காரணம் என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. இறந்த சிவராமன் என்பவர் வெளியூரில் வங்கியில் வேலை செய்து வந்ததால் சொத்தை பார்க்கவில்லை அது மோசடி செய்யப்பட்டதால் முறைப்படி நீதிமன்றத்திற்கு சென்று இறப்பு மற்றும் வாரிசு சான்றிதழ் வாங்கினேன்.

லெட்சுமியின் இறப்பை பதிவு செய்ய பிராதில் கண்ட சிவராமன் என்பவர் மனு தாக்கல் செய்தார். அந்த மனுவும் அதில் ஏற்பட்ட நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் ஏற்பட்ட உத்தரவும் சிவராமனிடம் இருந்து வருகிறது.

அந்த ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். ஆவணங்களை வைத்துள்ள சிவராமனை இவ்வழக்கில் சாட்சியாக விசாரிக்க தயாராக உள்ளீர்களா என்றால் அவர் உடல்நிலை சரியில்லாமல் உள்ளார் அதனால் விசாரிக்க இயலாது.

நீதிமன்றத்தில் வாரிசு மனு நடவடிக்கை பேரன் சிவராமன் தான் செய்தார். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ 13 ஆவணத்தில் உள்ள கையொப்பம் லெட்சுமியம்மாள் உடைய கையொப்பம் என்றால் அது லெட்சுமியம்மாள் கையொப்பம் இல்லை.

பி.வா.சா.ஆ 13 ல் கண்டுள்ள லெட்சுமியம்மாளும் வா.சா.ஆ 9 ல் கண்டுள்ள லெட்சுமியம்மாளும் வேறு வேறு நபர்கள். பி.வா.சா.ஆ 14 ஆவணத்தில் லெட்சுமியம்மாள் – பிச்சுஅய்யர் இருவருன் மகன் S.P.சுப்பிரமணியன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது.

பி.வா.சா.ஆ 16 ஆவணத்தில் லெட்சுமியம்மாள் கணவர் பிச்சுஅய்யர் என்று கண்டுள்ளது என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. வழக்கில் கண்ட தாவா சொத்துக்கள் எந்த குரூப்பில் உள்ளது என்றால் தெற்கு சந்தனூர் ஊரில் உள்ளது. பி.வா.சா.ஆ 16 ல் கண்ட சொத்துக்களும் தெற்கு சந்தனூரில் தான் உள்ளது என்றால் சரிதான்.

வா.சா.ஆ 11 வது ஆவணம் எதற்காக தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் அசல் வழக்கு எண் 138/1996 ல் லெட்சுமியம்மாள் உயிருடன் இருந்தால் என சொல்லி பிரதிவாதிகள் தரப்பு ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தார்கள் அதற்காக நான் கேரளாவிற்கு சென்று மோசடி செய்த ஆவணத்தை எடுத்துவந்து வா.சா.ஆ 11 ஆக நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன்.

என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ 11 ஆவணத்தில் லெட்சுமியம்மாள் கையொப்பம் உள்ளதா என்றால் இல்லை. ஆனால் எழுதிக்கொடுப்பதில் ஒரு நபராக லெட்சுமியம்மாள் உள்ளாரா என்றால் ஆமாம். வா.சா.ஆ 11 ல் உங்களிடம் காட்டப்படும் இடத்தில் ஒப்பம் லெட்சுமியம்மாள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம், ஆனால் அது

லெட்சுமியம்மாளின் கையெழுத்து இல்லை.

லெட்சுமியம்மாளின் கையொப்பத்தை காட்டக்கூடிய நீங்கள் நகல் போட்டு எடுத்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா. ஆ 11 ஆவணம் தெற்கு சந்தனூர் ஊரில் உள்ள சொத்திற்கு பாத்தியப்பட்டது. அசல் வழக்கு எண் 138/1996 க்குரிய ஆவணம் தான் இந்த வா.சா.ஆ 11 ஆவணம் ஆகும்.

வா.சா.ஆ 11 ஆவணத்தில் லெட்சுமியம்மாள் திருமேனிக்கு கிரயம் கொடுத்துள்ளதாக கண்டுள்ளது என்றால் அது மோசடியான ஆவணம் ஆகும். ஆனால் அதில் கண்டுள்ள கையொப்பம் நான் சொல்லும் லெட்சுமியம்மாளின் கையொப்பம் இல்லை.

அசல் வழக்கு எண் 138/1996 வழக்கில் லெட்சுமியம்மாள் 1 ம் பிரதிவாதியாக உள்ளார். அதில் 1 ம் பிரதிவாதி லெட்சுமியம்மாளின் முகவரியாக மதுரை முகவரி காட்டப்பட்டுள்ளது என்றால் அது மோசடியாக காட்டப்பட்டுள்ளது.

நீங்கள் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ 11 ஆவணத்திற்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. மேற்படி ஆவணத்தில் லெட்சுமியம்மாள் கையொப்பம் போட்டதற்கான அசல் ஆவணம் அல்லது சார்பதிவகத்தில் உள்ள கையொப்ப பதிவேடு ஆகியவற்றை நீதிமன்றத்திற்கு Send for செய்து பார்வையிட்டால் தான் அந்த கையெழுத்து யார் போட்டது என்று தெரியவரும் என்றால் சரியல்ல.

அதனால் தான் நீங்கள் அசல் பதிவேட்டை வரவழைப்பதற்கும் கையொப்பத்தை ஒப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமல், கையெழுத்தே இல்லாத வா.சா.ஆ 11 ஐ தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல.

வழக்கு நிலுவையில் இருக்கும் போது என்னிடம் காட்டப்படும் பதிவு கிரய பத்திரம் 21.12.2022 ம் தேதி தாவா சொத்துக்களை பவர்

ஏஜென்ட் ஸ்தானத்தில் நான் என் மனைவிக்கு பதிவு கிரய பத்திரம் மூலம் கிரயம் கொடுத்ததற்கான கிரய பத்திரத்தின் சார்பதிவாளர் நகல் என்றால் சரிதான். அது **பி.வா.சா.ஆ 18** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

வழக்கு நிலுவையில் இருக்கும் போது தாவா சொத்துக்களை நான் என் மனைவிக்கு பி.வா.சா.ஆ 18 ஆவணம் மூலம் கிரயம் கொடுத்த விபரத்தை நீதிமன்றத்தில் தெரிவிக்க மறைத்துவிட்டேன் என்றால் தவறு. கொரோனா காலகட்டத்தில் நான் மிகவும் முடியாமல் மருத்துவமனையில் இருந்ததால் நான் என் மனைவிக்கு செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்தேன்.

எப்படி பாத்தியம் என்பதை மேற்படி பி.வா.சா.ஆ 18 ஆவணத்தில் சொல்லியுள்ளேன். கொரோனா தொற்று முடிந்து சரியானபின்பும் மேற்படி விசயத்தை நீதிமன்றத்தில் தெரிவிக்காதது உண்மை விபரத்தை மறைப்பதற்கான கெட்ட உள்நோக்கத்துடன் உள்ளது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ 18 ஆவணம் ஏற்பட்டுவிட்டதால் இந்த வழக்கை நடத்துவதற்கு உங்களுக்கு அருகதை இல்லை என்றால் சரியல்ல.

தற்போதும் தாவா சொத்து பிரதிவாதிகளின் பாத்தியத்தில் இருந்து வருகிறது என்றால்சரியல்ல, எங்கள் அனுபவத்தில் உள்ளது. வா.சா.ஆ 12 முதல் வா.சா.ஆ 15 உள்ள ஆவணங்கள் தாவா வழக்கு சொத்துக்கள் குறிப்பிடாத ஆவணங்கள் என்றால் சரிதான். ஆனால் அசல் வழக்கு எண் 138/1996 வழக்கில் நல்லதம்பி மற்றும் பாஸ்கரன் மோசடியான ஆவணத்தை போட்டதால் அதற்கு பதிலாக நான் இந்த ஆவணங்களை தாக்கல் செய்தேன்.

நீங்கள் அந்த ஆவணத்திற்கு பதிலாக இந்த ஆவணங்களை போட்டேன் என்று சொல்வது முன்னுக்குப் பின் முரணாக உள்ளது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ 18 ஆவணத்தை நீங்கள் செட்டில் மெண்ட்டாக கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

பி.வா.சா.ஆ 18 ஆவணத்தின் அசல் ஆவணம் என்னிடம்

உள்ளது. அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாமல் நான் மறைத்துவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல.

**நீதிமன்ற அனுதியுடன் மறுவிசாரணை**

அசல் வழக்கு எண் 138/1996 கண்டுள்ள 1 ம் பிரதிவாதி லெட்சுமியம்மாளுக்கும் நீங்கள் பிராதில் குறிப்பிட்டுள்ள லெட்சுமியம்மாளுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை.

**குறுக்குவிசாரணை**

அசல் வழக்கு எண் 138/1996 கண்டுள்ள 1 ம் பிரதிவாதி லெட்சுமியம்மாள் தான் சொத்துக்களுக்கு உரிமையுள்ளவர் என்றாலும் நீங்கள் பிராதில் குறிப்பிட்டுள்ள லெட்சுமியம்மாள் சொத்திற்கு சம்பந்தம் இல்லாத நபர் என்றால் சரியல்ல.

அதே போல் பிச்சுஅய்யர் என்பது ஒரே பெயர் தான் அவருக்கு மறு பெயர் கிடையாது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

**-Sd-**

**Taken down by me in open court readover/interpreted to the witness in Tamil and acknowledged by him/her to be correct.**

**-Sd-**
**District Munsif,**
**Manamadurai.**